பக்கங்கள் 12
விலை ரூ. 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 38
கதிர் : 199

செவ்வாய்க்கிழமை 13 ஜூன் 2023

வைகாசி 30 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

## ரணில் - பெரமுன உறவு முறிந்தது!

### நேற்றிரவு கூட்டத்தில் கடும் வாக்குவாதம்

கொழும்பு, ஜூன் 13
சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்கும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் 'அரசியல் போர்' மூண்டுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் கருத்துகள் முன்வைக்கப்பட்டு வந்த நிலையில், இரு தரப்புக்கும் இடையே பெரும் பிளவு ஏற்பட்டிருப்பதை உறுதிப்படுத்தும் சம்பவமொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.
அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் »11

## ஜீவனோடு ரணில் இந்தியா பயணம்

கொழும்பு, ஜூன் 13
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த மாதம் 21ஆம் திகதி இந்தியாவுக்குப் பயணம் மேற் »10



## ரணிலின் பாய்ச்சலால் பணிப்பாளர் பதவிதுறப்பு



கொழும்பு, ஜூன் 13
தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அநுர மனதுங்க, தனது பதவி விலகல் கடிதத்தை புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலரிடம் கையளித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. »11

## 33 ஊடக நிறுவனங்களை மூடவேண்டிய நிலைமை

கொழும்பு, ஜூன் 13
ஒளி - ஒலிபரப்புச் சட்டவரைவு நிறைவேற்றப்பட்டால் 33 ஊடக நிறுவனங்களின் அனுமதிப் பத்திரங்கள் 6 »09

## மக்கள் காணிகளை ஆக்கிரமித்து விகாரைகள் கட்டத் தேவையில்லை

'நீங்கள் எனக்கு வரலாறு கற்பிக்க முயல்கின்றீர்களா? நான் உங்களுக்கு வரலாறு கற்பிக்கவா?'

### தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளருடன் தமிழ் அரசு முன்னிலையில் ரணில் காட்டம்

கொழும்பு, ஜூன் 13
வரலாற்று முக்கியத்துவம் மிக்க விகாரைகள் உள்ளிட்டவற்றைப் பாதுகாக்கவேண்டியது அவசியமாகும். அதற்காக பொது மக்களின் காணிகளை ஆக்கிரமிப்பதற்கு இடமளிக்க முடியாது. அத்துடன் தேசிய »11

ஒளி - ஒலிபரப்புச் சட்டவரைவு

## ஊடகங்களுடன் இணைந்து எதிரணி நீதிமன்றை நாடும்

கொழும்பு, ஜூன் 13
ஒளி - ஒலிபரப்பு சட்டவரைவுக்கு எதிராக ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகள் ஊடக நிறுவனங்களுடன் இணைந்து நீதிமன்றம் செல்வதற்கு முடிவெடுத்துள்ளன.
இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் விரிவாகக் கலந்துரையாடுவதற்கு ஊடக சங்கங்கள் தீர்மானித்துள்ளன.
மேலும், இந்தச் சட்டவரைவுக்கு எதிராக »11

## கோத்தாவைக் கழற்றி விடுகிறது சிறிலங்கா பொதுஜன பெரமுன

கொழும்பு, ஜூன் 13
சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் ஜனாதிபதியாக இருந்த கோத்தாபய ராஜபக்ச தவறிழைத்தாரே தவிர, பொதுஜன பெரமுன தவறிழைக்கவில்லை என்று அந்தக் கட்சியின் பொதுச்செயலர் சாகர காரிய »11

## கஞ்சா வழக்கில் தேடப்பட்டவர் போலிக் கடவுச்சீட்டுடன் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 13
கஞ்சா வழக்கு, விசேட அதிரடிப் படையினர் மீது தாக்குதல் நடத்தியமை உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் தொடர்பில் தேடப்பட்டு வந்தவர் யாழ். தனியார் பேருந்து நிலையத்தில் வைத்து நேற்றுக் காலை »11

## தேர்தலை ஒத்திவைக்க முயன்றால் எதிரணிகள் கூட்டாக களமிறங்குமாம்

### ஜி.எல்.பீரிஸ் எச்சரிக்கை



கொழும்பு, ஜூன் 13
ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க முற்பட்டால், அந்த முயற்சியைத் தோற்கடிப்பதற்கு எதிரணிகள் கூட்டாகக் களமிறங்கும் என்று சட்டத்துறைப் »10

## 'சிங்கப்பூர்' என்று புலம்பாமல் அந்தநாடு போல முன்னேறுங்கள்

### காட்டமாகத் தெரிவித்தார் ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர்

கொழும்பு, ஜூன் 13
'சிங்கப்பூர், சிங்கப்பூர் என்று புலம்பிக் கொண்டிருக்காமல் சிங்கப்பூரைபோல் முன்னேற முயற்சிக்கவேண்டும்' என்று இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் டெனிஸ் சைபி தெரிவித்துள்ளார். »11

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
ரூ.120,000/=
அதிகபட்ச இரகசியதன்மை
சிநேகபூர்வமான உடனடி சேவை
சிறந்த பாதுகாப்பு
011 200 88 88
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
Fitch Rating: "A-" (lka)
செலான் வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சுக்கான அழைப்பு ஏமாற்றும் நாடகம்தான்

## வினோ எம்.பி. தெரிவிப்பு

**முல்லைத்தீவு, ஜூன் 13**

**தமிழர்களை இனப்பிரச்சினைக்கான பேச்சுக்காக ஜனாதிபதி ரணில் அழைத்துள்ளமை ஒரு போலி நாடகம். எங்களை ஏமாற்றுவதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த அழைப்பை விடுத்துள்ளார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் தெரிவித்தார்.**

முல்லைத்தீவு மாவட்டத்தில் சுதந்திரபுரம் படுகொலைகளுக்கான அஞ்சலி நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜே.ஆர்.ஜெயவர்த்தன காலம் முதல் ரணில் விக்கிரமசிங்க காலம் வரையில் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு இனப்படுகொலைகளை நாங்கள் மறக்கவில்லை. இந்த இனப்படுகொலைகள் எல்லாம் எங்களின் தமிழ்த்தேசியத்தை சிதைவடையச்செய்து, உணர்வுகளை அடக்கி, உரிமைப்போராட்டத்துக்கு எங்கள் தயார்ப்படுத்தல்களை அடியோடு கிள்ளி விடுவதற்காக காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட விடயங்கள்தான்.

எங்களின் உரிமைப்போராட்டங்கள் அரசியல் ரீதியாகவும், அகிம்சை ரீதியாகவும் எங்களின் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டபோது மூத்த தலைவர்கள் பலரும் சிங்கள - பேரினவாத வன்முறையாளர்களால் தாக்கப்பட்டனர். இன்றுவரை அது தொடர்கின்றது. எங்கள் போராட்டத்தை இல்லாமல் செய்யவேண்டும் என்பதற்காகவும் எங்கள் உரிமைப் போராட்டத்தை நாங்கள் மீண்டும் ஒருதடவை சிந்திக்கக்கூடாது என்பதற்காகவுமே மாறிமாறி வரும் அரசாங்கங்கள் செயற்படுகின்றன. நல்லாட்சி அரசாங்கம் என்று சொல்லப்பட்ட மைத்திரி - ரணில் அரசாங்கம், தமிழ்மக்களின் உரிமைகளைத் தராது எப்படி ஏமாற்றியதோ, அவ்வாறுதான் தற்போது ரணில் அரசாங்கம் ஏமாற்ற முனைகின்றது. ஜனாதிபதி ரணில், பேச்சு என்று தெரிவித்து தற்போது அழைப்பு விடுத்துள்ளமை ஏமாற்று நாடகம்தான்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது தனது வெற்றியை இலக்குவைத்தே இந்தப் பேச்சு நாடகத்தை அவர் ஆரம்பித்துள்ளார். ஆரம்பத்தில் பேச்சுக்களுக்கு தமிழ்த் தேசியக் கட்சிகள் அழைக்கப்பட்ட நிலையில், கடைசியாக நடந்த பேச்சு தமிழரசுக் கட்சியை மையப்படுத்தியதாக உள்ளது. கடந்த காலங்களில் விடுதலைப்போராட்டப் போராளிகளைப் பிரித்தாண்டதைப்போன்று பிரித்தாளும் தந்திரத்தைத் தற்போதும் அரசாங்கம் கையாள்கின்றது - என்றார். (ம-19)



## தென்னம்பிள்ளைகள் தீயில் எரிந்து நாசம்!

சாவகச்சேரி - கச்சாய் வீதியில் உள்ள தென்னங்காணியில் பரவிய தீயால் பெருமளவான தென்னம்பிள்ளைகள் எரிந்து நாசமாகியுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை மாலை நடந்துள்ளது. அயலவர்கள் தீயை அணைக்க நடவடிக்கை எடுத்தபோதும், கடும் காற்றுக் காரணமாக தீ விரைவாகப் பற்றி தென்னம்பிள்ளைகள் எரிந்து அழிவடைந்துள்ளன. (எ-9)

## தர்மகர்த்தாசபைத் தேர்தல்

யாழ்ப்பாணம், ஜூன் 13

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபைத் தேர்தல் எதிர்வரும் 25ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் பி.ப. 1 மணி வரை மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பான வாக்காளருக்கான அறிவித்தல், வேட்பாளர் விபரம் அடங்கிய கடிதம் அங்கத்தவர்களுக்கு தேர்தல் குழுவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், கடிதம் கிடைக்கப்பெறாத அங்கத்தவர்கள் பிரதேசசெயலகத்துடன் தொடர்புகொள்ளுமாறும் வாக்களிப்பு தினத்தன்று தேசிய அடையாள அட்டையுடன் தேர்தல் குழுவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தையும் எடுத்துவரவேண்டும் எனவும் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் யசோதா அறிவித்துள்ளார். (ய)

## கஜமுத்துடன் இருவர் கைது!

வவுனியா, ஜூன் 13

கஜமுத்துடன் இருவர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

மாங்குளம் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் வவுனியா நகரப் பகுதியில் திடீர்ச் சோதனை மேற்கொள்ளப்பட்டது. கார் ஒன்றில் இருந்து விற்பனைக்குத் தயாரான நிலையில் கஜமுத்து மீட்கப்பட்டதுடன், அந்தக் காரில் இருந்த 26 மற்றும் 23 வயதுடைய இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் தெஹியந்தர, ஹன்மன பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்ட இருவரும் மேலதிக விசாரணைக்காக வவுனியா வனஜீவராசிகள் பாதுகாப்பு அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-110)

## டெங்கு தொடர்பில் விழிப்பாக இருங்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 13

சுற்றாடலில் நுளம்பின் பெருக்கம் அதிகரித்துச் செல்வதால் அதற்கேற்ப டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். எனவே பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும் என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை அறிவுறுத்தியுள்ளது.

அத்துடன், நுளம்புகள் பெருகக்கூடிய இடங்களை இனங்கண்டு அவற்றை அழிக்குமாறும், அதேபோன்று பொது இடங்கள் அனைத்திலும் கிராமமட்ட அரச உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புக்கள், பொதுமக்கள் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் சிரமதான நடவடிக்கையை முன்னெடுக்குமாறும் சுகாதாரத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (ம-159)



## கப்பலேந்தி மாதா ஆலயத்தில் திருட்டு!

மன்னார், ஜூன் 13

மன்னார் கரிசல் கிராமத்தில் அமைந்துள்ள கப்பலேந்தி மாதா, ஆலயத்தின் கதவு உடைக்கப்பட்டு உண்டியல் உட்பட நற்கருணைக்கிண்ணம் உள்ளிட்ட பல பொருள்கள் திருடப்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது. திருட்டுத் தொடர்பில் ஆலய நிர்வாகத்தினரால் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. முறைப்பாட்டுக்கமைய சம்பவம் தொடர்பில் மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-60-213)

## தனியார்கல்வி நிறுத்தத்துக்கு சைவமகாசபை வரவேற்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 13

சிறார்களிடத்தில் ஆன்மிக, உளநல மேம்பாட்டை ஏற்படுத்தும் வகையில், தனியார் கற்றல் செயற்பாடுகளை வெள்ளி மற்றும் ஞாயிறுதினங்களில் நிறுத்தியுள்ள யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தின் தீர்மானத்தை சைவ மகாசபை வரவேற்றுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:

7 நாள்கள் நெருக்கீட்டைக் குறைத்து இனிமையான இளம்பராயத்தை சிறார்களுக்கு வழங்கும் விதமாக, வெள்ளி மற்றும் ஞாயிறு தினங்களில் தனியார் வகுப்புக்களை நிறுத்தும் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலரின் தீர்மானம் காலத்தின் தேவைகருதிய ஒன்றாகும். இதனைச் செயற்படுத்த பூரண ஒத்துழைப்பு வழங்கும் தனியார் கல்விப்புல தரப்பினரும் பாராட்டுக்குரியவர்களே.

இந்தத் தீர்மானம் குழந்தைகளில் ஓய்வு, ஆன்மிக ஈடுபாடு, உளநலம், குடும்பப் பிணைப்பு என்பனவற்றில் மிகுந்த பங்களிப்பை நல்கும்.

அத்துடன், போதைப்பொருள் பாவனை, மனஅழுத்தம், தவறான முடிவெடுத்து உயிர் மாய்த்தல் போன்றன குறைக்கப்படவும் காலப்போக்கில் இல்லாமற்போகவும் இந்தத் தீர்மானம் பேருதவி புரியும்.

மேலும் 7 நாள்களும் நெருக்கீட்டுடன் கல்வியை மட்டும் திணிப்பாக உட்செலுத்தினால் பிள்ளைக்கு ஏற்படும் மனப்பிறழ்வுகள் தொடர்பாகவும், மகிழ்ச்சியான இளம்பராயத்தின் அவசியம் தொடர்பாகவும் பெற்றோருக்கு தொடர் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் இந்த இடத்தில் வலியுறுத்துகின்றோம் - என்றுள்ளது. (ம-125)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

*கண்ணகை அம்மன் துறையில்*

# மீன்பிடிப் படகுகள் குவிவு; போக்குவரத்து நெருக்கடி!

ஊர்காவற்றுறை , ஜூன் 13

**ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் துறையில், மீன்பிடிப் படகுகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால், பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டுள்ளது என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்ததாவது:-

கண்ணகை அம்மன் துறையானது வெறும் பயணிகள் போக்குவரத்துக்கான சிறிய துறையாகும். எனினும், இந்தத் துறை குருநகர்ப் பகுதி மீனவர்களால் மீன்கள், மீன்பிடி உபகரணங்கள், ஐஸ் பெட்டிகள் என்பனவற்றை இறக்கும் இடமாகவும், மீன்களை மாற்றிக்கொள்ளும் இடமாகவும் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதனால், துறையிலும் துறைக்கான பாதையிலும் தற்போது போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது.

கண்ணகை அம்மன் துறையிலிருந்து அனலைதீவு, எழுவைதீவு, பருத்தித்தீவு போன்ற பகுதிகளுக்கு மக்கள், அரச உத்தியோகத்தர்கள் என நூற்றுக்கணக்கான பயணிகள் பயணத்தை மேற்கொண்டு வருகின்றனர். இந்தத் தீவுகளுக்காகப் பொருள்களைப் பரிமாறும் துறையாகவும் இது விளங்குவதனால், மீனவர்களின் நடவடிக்கை காரணமாகத் தற்போது கூடுதலான போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டுள்ளது. எனவே இது தொடர்பில் அதிகாரிகள் விரைந்து நடவடிக்கையொன்றை எடுக்கவேண்டும் - என்றனர். (ம-20)

## போதை மாத்திரைகளுடன் கோப்பாய் இளைஞன் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 13

100 போதை மாத்திரைகளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். மாவட்ட விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கோண்டாவில் கிழக்கு, செபஸ்ரியன் வீதியில் நடத்தப்பட்ட சோதனை நடவடிக்கையிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் 25 வயதுடையவர் என்றும், விற்பனைக்காக இவர் போதை மாத்திரைகளை வைத்திருந்தார் என்றும் கூறப்படுகின்றது. சந்தேகநபர் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளநிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ-125,20)



## மாடுகள் திருடிய குற்றச்சாட்டில் இருவர் நேற்று மடக்கிப் பிடிப்பு!

வவுனியா, ஜூன் 13

மாடுகளைத் திருட முயன்ற குற்றச்சாட்டில் வவுனியா, சமயபுரம் கிராமத்தில் இருவர் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுத் திங்கட்கிழமை காலை 6 மணியளவில் நடந்துள்ளது.

சமயபுரம் கிராமத்தில் கடந்த சில மாதங்களாக கால்நடைகள் திருட்டுப் போகும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. நேற்று இருவர் மாடுகளைத் திருடிய குற்றச்சாட்டில் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர். சந்தேகநபர்களை நெளுக்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்க மறுத்த பொதுமக்கள், இருவரையும் வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் ஒப்படைத்தனர்.

எமது கிராமத்தில் கால்நடைகள் திருடப்படுவது அதிகரித்துள்ளது. இது தொடர்பாக நெளுக்குளம் பொலிஸார் எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை. அதனாலேயே சந்தேகநபர்களைச் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளோம் என்று பொதுமக்கள் தெரிவித்தனர். (எ-110)

## அலங்கார உற்சவம்

சாவகச்சேரி, ஜூன் 13

சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு ஞானவீரபத்திரர் கோயில் அலங்காரத் திருவிழா நேற்றுமுன்தினம் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ய-9)

# ரயில் விபத்தைத் தடுக்க விசேட வேலைத்திட்டம்

ரயில் விபத்துக்களைத் தடுக்கும் வகையில், இலங்கை ரயில் திணைக்களம் நாடு முழுவதும் விசேட வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளது.

ரயில் வலையமைப்பில் நாடளாவிய ரீதியில் உள்ள 400 பாதுகாப்பற்ற ரயில் கடவைகளில் 'ஈ-கேற்' அமைப்பு உருவாக்கப்படும் என்று போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

ரயில் திணைக்களத்தின் அறிவுறுத்தலின் அடிப்படையில் அரச அபிவிருத்தி மற்றும் கட்டுமானக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து கோட்லென் இன்ரநஷனல் நிறுவனம் இந்த 'ஈ-கேற்' அமைப்பை உருவாக்கவுள்ளது.

அதேவேளை, கொடகம ரயில் நிலையத்துக்கு அருகில் 'ஈ-கேற்' பரீட்சார்த்தத்திட்டம் அண்மையில் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்டு வருகின்றது என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)




'சாப்பிள்ளை பெற்றாலும் மருத்துவிச்சிக் கூலி தப்பாது' என்டொரு பழமொழி இருக்கு. பிரசவம் பாக்கேக்க பிள்ளை செத்துப் பிறந்தாலும் கூட மருத்துவிச்சிக்கு கூலி எப்பிடியோ குடுக்கத்தான் வேனும் எண்டதுதான் அதின்ர அர்த்தம். அதை மாதிரி, யாழ்ப்பாணத்தில வாற மாசம் முதலாம் திகதியில இருந்து வெள்ளிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் ரியூசன் நடத்தத் தடை எண்டு ஓர்டர் போட்டாலும், வாத்திமாருக்கு உழைப்புக்கு பஞ்சம் வரப்போறேலை, அதை மாதிரி பிள்ளையளுக்கும் கோயிலுக்குப் போக நேரம் கிடைக்கப் போறேலை.

இந்த ரண்டு நாளும் ரியூசன்களுக்கு லீவு விடுகிறது, பிள்ளையள் கோயிலுக்கும், சேர்ச்சுக்கும் போறதுக்கும், குடும்பத்தோட சந்தோசமா இருக்கவும் தான். ஆனால் எங்கட ஆக்கள் என்னதான் சட்டம் போட்டாலும், அதை எப்பிடி மீறுறது எண்டதைக் கண்டு பிடிக்கிறதில வலுவிண்ணர். கொரோனாவுக்கு முந்தின காலத்தில இப்பிடி ரியூசனை நிப்பாட்டினால் பிள்ளையளுக்கு ஓய்வுநேரம் கிடைக்கும் எண்ட நிலைதான் இருந்தது. ஆனால் கொரோனாவோட 'ஸூம்' கிளாஸ்கள் தொடங்கின பிறகு, அல்லும் பகலும் செல்போனிலயும் பிள்ளையளுக்கு படிக்கிறதே வாழ்க்கையாகிப் போட்டுது. அதால இனிமேல் வெள்ளி, ஞாயிறில எங்கட ஆக்கள் ஸூமில கிளாஸ் நடத்தி, கடைஞ்ச மோருக்கை குடைஞ்சு வெண்ணெயை எடுக்கத்தான் முனைப்பா நிப்பினம். ரியூசனை விடவும் ஸூம் கிளாஸ் எண்டால், வாத்திமாருக்கு லாபம் கூட. வீட்ட இருந்தபடியே, போனுக்கு முன்னால வகுப்பு நடத்தினால், வீட்டு வேலையும் பாக்கலாம், காசும் பாக்கலாம். ரியூசன் எண்டால், அதுக்குப் பொறுப்பானவை எவ்வளவு குடுக்கினமோ அதைத்தான் வாங்கிக்கொண்டு வந்திச்சினம். ஆனால் ஸூமில ஒரு சதம் கூட சிந்தாமல் சிதறாமல் வாத்திமாரின்ர பொக்கற்றுக்குள்ள அப்பிடியே வந்து விழும். போய்வாற செலவும் இல்லை. எப்பிடிப்பாத்தாலும் அவைக்கு லாபம் கூடத்தான்.

அதைமாதிரி பிள்ளையளும் ரீயூசன் இல்லையெண்டு, கோயில் குளத்தையோ, கிறவுண்டையோ எட்டியும் பாக்க ஏலாது. ரியூசனுக்குப் போனாலாவது வகுப்புப் பெடியளோட ஏதும் கதைச்சு மைண்டை கொஞ்சம் ரிலாக்ஸா வைச்சிருக்கலாம். ஆனால் ஸூமில அதெல்லாம் நடக்காது. அப்பிடியே ஸூனியம் வைச்ச மாதிரி போனையே வெறிச்சுப் பார்த்துக் கொண்டிருக்க வேனும். கண்ணுக்கும், மூளைக்கும் உதாலதான் கெடுதி கூட. ஸூமை விட இப்ப 'பேர்சனல்' கிளாஸ் எண்டு வாத்திமார் தனியொரு பிள்ளைக்கு வீட்டில போய் படிப்பிக்கிறதும் கூடிப்போச்சு. அதுக்கு மணித்தியாலத்துக்கு ஆயிரம், ரண்டாயிரம் எண்டு சுளையாக் கிடைக்கிறதால, ரீயூசனுக்குப் போய் தொண்டைத்தண்ணி வத்தக் கத்திறதை விட, இது லாபமெண்டு கன வாத்திமார் பேர்சனல் கிளாஸ் எடுக்கத்தான் விரும்புகினம். அவைக்கும் இந்த வெள்ளி, ஞாயிறு ரீயூசன் லீவு வாய்ச்சுப் போச்சு. இனித் தங்களுக்கு ப்ரீயா உள்ள நேரமெல்லாம் பேர்சனல் கிளாஸ் போட்டு, காசைக் கறக்கத்தான் வழி பாப்பினம்.

அதால, வெள்ளி, ஞாயிற்றுக்கிழமையளில ரியூசன்களுக்கு மட்டும் நடத்தத் தடை போடாமல் ஸூம் கிளாஸ், பேர்சனல் கிளாஸ் எண்டதுகளுக்கும் தடை போட்டால்தான் பிள்ளையளுக்கு உண்மையா அந்த ரண்டு நாளும் ஓய்வு கிடைக்கும். அதோட இந்த ரண்டு நாளும் ரீயூசன் நடத்தத் தடை போட்டதுக்கும் பலன் கிடைக்கும். அரசாங்க அதிபர், இந்தப் படிக்காத பட்சி சொல்லுறதை கொஞ்சம் கவனத்தில எடுப்பாரா?



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கள் விற்பனை நிலையத்தை உடனடியாக இடமாற்றுங்கள்

## மக்களின் போராட்டம் வெற்றி

**மன்னார், ஜீன் 13**

**மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வேட்டையா முறிப்புக் கிராமத்தில் அமைந்துள்ள 'கள்' விற்பனை நிலையத்தை இடமாற்றக்கோரி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை பொதுமக்கள் போராட்டம் நடத்தியதைத் தொடர்ந்து, அந்தக் கள் விற்பனை நிலையம் மூடப்பட்டது.**



இந்தக் கள் விற்பனை நிலையம் தவறான இடத்தில் அமைந்துள்ளதால் பல்வேறுபட்ட பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்று பொதுமக்கள் சுட்டிக்காட்டி உள்ளனர். குடும்பங்களுக்குள் பிரச்சினைகள், சிறுவர்கள் போதைக்கு அடிமையாகின்றமை, சமூகச் சீர்கேடுகள் என்பன இந்தக் கள் விற்பனை நிலையத்தால் ஏற்படுகின்றன என்பது பொதுமக்களின் கருத்தாக அமைந்தது. அத்துடன், கள் விற்பனை நிலையத்தை மையப்படுத்தியதான போர்வையில் வேறு போதைப்பொருள்கள் விற்கப்படுகின்றன என்றும் பொதுமக்கள் முறையிட்டனர்.

பொதுமக்களின் போராட்டத்தைத் தொடர்ந்து, சம்பவ இடத்துக்கு வருகை தந்த அடம்பன் பொலிஸார் உடனடியாக அடம்பன் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க முகாமையாளரைத் தொடர்புகொண்டு சம்பவ இடத்துக்கு வருகை தருமாறு கூறியதை அடுத்து, சம்பவ இடத்துக்கு வருகைதந்த முகாமையாளர் மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்ததோடு, கள் விற்பனை நிலையத்தை மூடுவதாக அறிவித்தார்.

இதேவேளை, இந்தக் கள் விற்பனை நிலையம் மூடப்பட்டால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்று சீவல் தொழிலில் ஈடுபடும் சுமார் 10 குடும்பங்கள் முறையிட்டுள்ளன. கள் விற்பனை நிலையம் மூடப்படும் பட்சத்தில் தமது பொருளாதாரத்துக்கான மாற்று நடவடிக்கை ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-213)





### யாழ். பொலிஸாரால்

## யாழ். பண்ணைப் பகுதியை சுத்தமாக்கும் வேலைத்திட்டம்

யாழ்ப்பாணம், ஜீன் 13

யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் ஏற்பாட்டில் யாழ். பண்ணைப் பகுதியை சுத்தப்படும் வேலைத்திட்டம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாண பண்ணைப் பகுதியில் அதிகளவிலான பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் கழிவுகள் காணப்பட்ட நிலையில் குறித்த பகுதி சுத்தம் செய்யப்பட்டுள்ளது. பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் கழிவுகள் சேகரிக்கப்பட்டு யாழ்.மாநகரசபையின் ஊழியர்களின் உதவியுடன் அகற்றப்பட்டது.

இதன்போது யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், யாழ்ப்பாண பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் யாழ்ப்பாண பொலிஸ் நிலைய உயரதிகாரிகள் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட பொலிஸார் பங்கேற்று சிரமதானப் பணியை முன்னெடுத்தனர். (ச-26)

## யானை தாக்கியதில் தந்தை, மகன் பலி!

கொழும்பு, ஜீன் 13

காட்டில் விறகு வெட்டிக் கொண்டிருந்த தந்தையும், மகனும் யானை தாக்கிப் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் மொனராகலை மாவட்டம், பிபிலை பிரதேசத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது. 49 வயதான தந்தை மற்றும் 20 வயதுடைய மகன் ஆகியோரே யானையின் தாக்குதலுக்கு இலக்காகி பலியாகியுள்ளனர். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மொனராகலைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-22)

## நல்லூர் மூத்த விநாயகர் வருடாந்தப் பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், ஜீன் 13

நல்லூர் மூத்த விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 நாள்கள் திருவிழா நடைபெறும். திருவிழாவில் எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 8 மணிக்குத் தீர்த்தோற்சவமும் நடைபெறும் என ஆலய தர்மகர்த்தா தெரிவித்துள்ளார். (ச-ரி)




துர்க்கா விளையாட்டுக்கழக ஸ்தாபகர் அமரர் தம்பித்துரை சிவராஜாவின் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட கோண்டாவில் பிறீமியர் லீக் மென்பந்து தொடரில், கோண்டாவில் சுப்பர் கிங்ஸ் அணி கிண்ணம் வென்றது. கடந்த 4ஆம் திகதி இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் கோண்டாவில் ஈகிள் வொறியர்ஸ் அணியை வீழ்த்தி கோண்டாவில் சுப்பர் கிங்ஸ் சம்பியனானது. (ஞ)

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** புதிய முயற்சிகள் அனுகூலமாகும். உடல் ஆரோக்கியத்தில் மட்டும் சற்றுக் கவனம் செலுத்தவும். உறவினர்கள் மூலம் சில சங்கடங்கள் ஏற்படும். திடீர் செலவுகளும் ஏற்படும்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவு கிடைக்கும். நண்பர்கள் வகையில் திடீர் ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**மிதுனம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர்பாராத பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படக்கூடும். சகோதர வகையில் எதிர்பாராத ஆதாயம் கிடைக்க வாய்ப்பு உள்ளது.

**கடகம்:** தந்தைவழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற் சிகள் சாதகமாகும். வாழ்க்கைத் துணை வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். நண்பர்களின் மூலம் எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும்.

**சிம்மம்:** சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. மற்றவர்களுடன் வீண் மனஷ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும். உங்கள் முயற்சிக்கு நண்பர்களின் ஆதரவு கிடைக்கும். வாழ்க்கைத் துணை வழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகும்.

**துலாம்:** எதிர்பாராத செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளுக்காக பாடுபட வேண்டி இருக்கும். உறவினர்களால் சங்கடங்கள் ஏற்படும்.

**விருச்சிகம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றிகரமாக முடியும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**தனுசு:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும். பிற்பகலுக்குமேல் பிள்ளைகளால் பெருமை உண்டாகும்.

**மகரம்:** அனுகூலமான நாள். தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள். இளையசகோதரவகையில் செலவுகள் ஏற்படக்கூடும். மற்றவர்களுடன் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும்.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். முக்கியமான முடிவு எடுக்க உகந்த நாள். தாயின் விருப்பத்தை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும்.

**மீனம்:** வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஆதரவு தருவார். செலவுகள் அதிகரிப்பதால் சிலருக்கு சிறிய அளவில் கடன் வாங்க நேரிடும். இளைய சகோதரரால் சங்கடங்கள் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறைவிரிக்காப் பறவைகள்!

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதாகி, 30 ஆண்டுகால சிறைவாசத்தின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ள ஏழு பேரில், இலங்கையைச் சேர்ந்தவரான சாந்தன், தான் மீண்டும் இலங்கைக்குத் திரும்புவதற்கான வாய்ப்புகளையும் வசதிகளையும் ஏற்படுத்தித் தருமாறு இந்தியப் பிரதமர் மோடியிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றார். இந்த வழக்கில் கைதான ஏழு பேரில், முருகன், சாந்தன், ரொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் இலங்கையைச் சேர்ந்தவர்கள். இந்திய உச்ச நீதிமன்றம் இந்த வழக்கின் விசாரணைகளை முடிவுக்குக் கொண்டுவந்து அனைவரையும் விடுவித்துள்ள போதிலும், இலங்கையைச் சேர்ந்தோரின் நிலைமை மழைவிட்டும் நீங்காத தூவானம் போன்றதே. இவ்வாறானதொரு நிலையில், இலங்கையைச் சேர்ந்தோரின் பிரதிநிதியாகத்தான் சாந்தனின் வலியுறுத்தல் அமைந்திருக்கின்றது என்றும் கொள்ளலாம்.

'விடுதலையின் பின்னரான' நீண்ட சட்டப்போராட்டத்தின் முதல் படிநிலையை இவர்கள் இந்தியாவில் எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது. இந்த நால்வரும் இலங்கையைச் சேர்ந்தவர்கள் என்று வழக்கு விசாரணைகளில் தெரிவித்துள்ள போதிலும், அது சார்ந்த எந்த ஆவணங்களையும் இதுவரை அவர்கள் முன்வைக்கவில்லை. 'சட்ட விரோதமாக இந்தியாவுக்குள் நுழைந்தவர்கள்' என்ற பொதுவான மற்றொரு பார்வையும் அவர்கள் மீது இருந்தே வந்திருக்கின்றது. ஆதலால், இந்தியாவுக்குள் பிரவேசித்த சட்டவிரோத நுழைவைக் காரணமாகக் காட்டி, அதன் கீழான சட்ட ஏற்பாடுகளின் அடிப்படையில்தான் அவர்கள் அணுகப்படுவார்கள். தற்போது நிகழ்ந்து கொண்டிருக்கின்ற வருந்தத்தக்க சம்பவமும் அதுவேதான்.

கைதிகளாகச் சிறையிடப்பட்டிருந்த காலத்தை விடவும் தற்போது மோசமான முறையில் தாம் நடத்தப்படுவதாக அண்மையில் சாந்தன் ஒரு கடிதத்தில் வலியுறுத்தியிருந்தார். முன்னராவது, வாசிப்பதற்குப் புத்தகங்கள், நடைபயணத்துக்கு 'மூடப்பட்ட பரந்தவெளிகள்' என்றிருந்த (சிறை)வாழ்வு இப்போது ஒற்றைச் சிற்றறைக்குள் அவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது. தனிமைச் சிறைகளுக்குள் அவர்கள் உழல்கின்றனர். கருத்துச் சுதந்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றது. அல்லது அறவே இல்லாமலாக்கப்பட்டிருக்கின்றது. இவையெல்லாம் சேர்ந்துதான் பிரதமர் மோடி இதுவிடயத்தில் தலையிட வேண்டும் என்ற வலியுறுத்தலை சாந்தன் முன்வைக்கக் காரணமாகியிருக்கின்றது.

மறதி தமிழினத்தின் ஒரு தேசிய வியாதியென்பர். இந்திய உச்சநீதிமன்றம் இவர்களை விடுவித்து அரையாண்டு கடந்துவிட்டது. ஆனால், அவர்களை இலங்கைக்கு அழைத்துவருவதற்காக எத்தகைய வலியுறுத்தல்களை இங்குள்ள தமிழ்த் தலைமைகள் செய்தன? என்ற கேள்வி எழாமலில்லை. உண்மையில் தூதரக ரீதியில் அணுகப்பட வேண்டிய விடயமிது. ஆனால், இந்த விடயத்தில் தூதரக உறவுகள் மௌனித்தே இருக்கின்றன. எவரும் மூச்சுக்கூட விட்டதாயில்லை. தமிழ்த் தலைமைகளிடம் தவறு என்று பொத்தாம்பொதுவாக விரல் நீட்டிவிடவும் முடியாது. ஏனெனில், முருகன், சாந்தன், ரொபேர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோரை இலங்கைக்கு அழைத்துவர வேண்டும் என்று வலியுறுத்தி பொதுமக்களும் போராட்டமொன்றை நடத்தியதாகவில்லை.

அத்துடன், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்கள் மட்டுமல்லாது, ஈழத்தமிழர்களுக்காக குரல் கொடுக்கும் அரசியல் தலைவர்கள் கூட ராஜீவ் கொலை வழக்கில் விடுதலையான ஈழத்தமிழர்கள் விடயத்தில் காக்கின்ற மௌனம்கூட வேதனையானதே. இந்த வழக்கில் ஈழத்தமிழர்கள், இந்தியத் தமிழர்கள் என்ற பாகுபாடு காட்டப்படக்கூடாது. அனைவரும் தமிழர்கள். அனைவரும் 30 ஆண்டுகளுக்கும் மேல் தம் வாழ்வை சிறையில் செலவிட்டுள்ளனர். எனவே, நான்கு இலங்கைத் தமிழர்களையும் அவர்களின் தாயகம் நோக்கி அனுப்பிவைக்க வேண்டிய பெரும் பொறுப்பு தமிழகத் தலைவர்களுக்கு உண்டு. வானமே திறந்திருந்தாலும் இலக்குத் தெரியாமல் இறக்கை விரிக்காத பறவைகளின் வலி சொல்லிமாளாதது. அது இந்த நான்கு பறவைகளுக்கும் வேண்டாமே. பறப்பதற்குக் குரல்கொடுப்போம். இனியாவது பறக்கட்டும்.

### நாளொரு நல்வார்த்தை

"நீங்கள் செய்யும் தவறை உடனே திருத்திக் கொள்ளுங்கள். இல்லாவிட்டால் இன்னொரு தவறைச் செய்தவராகி விடுவீர்கள்"
– கன்பூசியஸ்




# ஊடகங்களை ஒடுக்க ஜனாதிபதி ரணில் சதி!

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

**யாழ்ப்பாணம், ஜூன் 13**

**ரணில் ஊடகங்களை ஒழுங்குபடுத்துவதாகக் கூறி ஒடுக்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறார் என்று மக்கள் விடுதலை முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊடகவியலாளர்களை அடக்குவதற்கும் ஊடக நிறுவனங்களை அடக்குவதற்கும் ரணில் விக்கிரமசிங்க ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் சட்டமூலம் ஒன்றைச் சமர்ப்பிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்து வருகிறார். தனக்கு ஏற்ற வகையில் செயற்படாத சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்களை பதவி நீக்குவது தொடர் கதையாக உள்ள நிலையில் தற்போது ஊடகங்களில் கைவைப்பதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். கடந்த காலங்களில் நாட்டில் இடம்பெற்ற பல மோசடிகளை ஊடகங்களே அம்பலப்படுத்தின. இவ்வாறான நிலையில் ஊடகங்களை அடக்க நினைப்பது மக்களின் ஜனநாயகக் கருத்துக்களை மறுப்பதற்கும் ஊடக ஜனநாயகத்தை குழி தோண்டிப் புதைப்பதற்குதம் ஏதுவாகவே அமையும் - என்றார். (ம-20)

# காய்ச்சல் நீடித்தால் சிகிச்சை அவசியம்

## சுகாதாரத்துறை அறிவுறுத்தல்

கொழும்பு. ஜூன் 13

இரு நாள்களுக்கு மேல் காய்ச்சல் உள்ளவர்கள் கட்டாயம் சிகிச்சைபெற வேண்டும் என்று சுகாதாரத்துறை அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளதாவது:-

காய்ச்சலால் பாதிக்கப்பட்ட ஒருவர் ஓய்வு எடுப்பதே மிக முக்கியமான விடயம். தினசரி நடவடிக்கைகளில் இருந்து ஓய்வு எடுப்பதன் மூலம் போதுமான ஓய்வு பெறுவது அவசியம்.

யாராவது பணியில் இருந்தால் அல்லது பாடசாலைக்குச் செல்பவர்கள் என்றால் அவர்கள் சில நாள்கள் வீட்டில் இருக்கவேண்டும்.

இரண்டாவது மிக முக்கியமான விடயம் திரவ உட்கொள்ளலை அதிகரிப்பது. காய்ச்சலைக் கட்டுப்படுத்தப் பரசிட்டமோல் உட்கொள்ளலாம். ஆயினும் டிஸ்பிரின், அஸ்பிரின் போன்ற மருந்துகளைத் தவிர்க்க



வேண்டும். டெங்குத் தொற்றாளர்கள் இந்த மருந்துகளை உட்கொண்டால் கடுமையான சிக்கல்களுக்கு வழிவகுக்கும்.

இரண்டாவது நாளில் காய்ச்சல் கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை என்றால், அவர்கள் மருத்துவ உதவியை நாட வேண்டும் - என்றார். (எ-இ)

**நாளை**

| | | |
|---|---|---|
| 14.06.2023 | சுபநேரம் : 04.23 - 05.53 | |
| புதன்கிழமை | ராகுகாலம் : 11.53 - 01.23 | |
| வைகாசி 31 | ஏகாதசிவிரதம் | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எம்.எப். நிபந்தனைகளுக்காக இரவு பகலாக உழைக்கும் அரசு

## நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



**கொழும்பு, ஜுன் 13**

**சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை செப்ரெம்பர் மாதத்துக்கு முன்னர் நிறைவேற்றுவதற்காக அரசாங்கம் இரவு பகலாக உழைக்கின்றது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.**

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சர்வதேச நாணய நிதியத்துடன் முன்னர் செய்து கொள்ளப்பட்ட 16 உடன்படிக்கைகளைப் போன்று அல்லாமல் அரசாங்கம் வெளிப்படைத்தன்மையுடன் செயற்படுகின்றது. இம்முறை இந்தச் செயற்பாடுகள் தொடர்பில் பொதுமக்கள் நன்கு அறிந்துள்ளனர்.

நாடாளுமன்ற விவாதத்தின்போது உடன்படிக்கையின் ஒவ்வொரு சரத்துத் தொடர்பிலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கருத்துக்களைத் தெரிவிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்புக்கொள்ளப்பட்ட எந்தவொரு நிபந்தனைகளையும் அல்லது சரத்துகளையும் மறைக்கும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லை.

புதிய மத்திய வங்கி சட்ட வரைவை நாடாளுமன்றத்தில் அங்கீகரிப்பது போன்ற பல முக்கியமான நடவடிக்கைகள் அடுத்த வாரங்களில் மேற்கொள்ளப்படவேண்டும். சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தங்களின் செயற்றிட்டத்தை செயற்படுத்துவதற்கான காலக்கெடுவை ஏற்பாடு செய்ய ஒரு விசேட குழு பணிபுரிகிறது. சில நிபந்தனைகளை நிறைவேற்ற மூன்று மாத கால அவகாசம் உள்ளது. கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகளும் துரித கதியில் நடைபெற்று வருகின்றன. பொருளாதாரத்தை உறுதிப்படுத்தவும் நீண்டகால அபிவிருத்தியை அடையவும் சில கடினமான மற்றும் செல்வாக்கற்ற முடிவுகள் எடுக்கப்படுகின்றன. இலக்குகளை அடைவதற்கு அனைத்துத் தரப்பினரின் ஆதரவும் தேவை - என்றார். (எ-இ)

## பழைய சோற்றை ஊட்டி பல்கலையில் பகிடிவதை

### 11 மாணவர்கள் இடைநிறுத்தம்

கொழும்பு, ஜுன் 13

பேராதனைப் பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தின் இரண்டாம் வருட மாணவர்கள் 11 பேர் புதிய மாணவர்களைப் பகிடிவதைக்கு உள்ளாக்கிய குற்றச்சாட்டில் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

இடைநிறுத்தப்பட்ட மாணவர்கள் புதிய மாணவர்களை கடந்த 5 ஆம் திகதி விடுதிக்கு அழைத்துச் சென்று பழுதடைந்த சோற்றை ஊட்டச் செய்து அவர்களைக் கடுமையான வார்த்தைகளால் திட்டினார் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இந்த வகுப்புத்தடை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும், முறையான விசாரணை நடத்தப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் டெரன்ஸ் மதுஜித் தெரிவித்தார். (எ-இ)

## வடமாகாணத்தில் சீரான வானிலை!

கொழும்பு, ஜுன் 13

வடமாகாணத்தில் இன்று சீரான வானிலை நிலவும் என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் உள்ளதாவது:-

சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதுடன், இந்தப் பிரதேசங்களில் சில இடங்களில் 75 மில்லிமீற்றர் அளவில் ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும். அதேவேளை, வடமேற்கு மற்றும் மத்திய மாகாணங்களில் பல தடவைகள் மழை பெய்யும்.

அத்துடன், ஊவா மாகாணத்திலும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் பல இடங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். மத்திய மலைநாட்டின் மேற்குச் சரிவு, வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை, புத்தளம் மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-45 கிலோ மீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும்.

இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ளப் போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் - என்றுள்ளது. (ம)

## பாடசாலை அதிபர் ரயிலில் சிக்கி சாவு!



கொழும்பு, ஜுன் 13

பாடசாலை அதிபர் ஒருவர் ரயிலில் மோதி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடந்துள்ளது.

தலவாக்கலை கல்கந்த வத்த பிரதேசத்தைச் சேர்ந்த ரதெல்ல தமிழ் வித்தியாலயத்தின் அதிபரான கதிர்வேல் சுப்பிரமணியம் என்பவரே உயிரிழந்துள்ளார்.

பாடசாலையைத் தூய்மைப்படுத்தும் நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டன. தூய்மைப் பணிகள் முடிந்து, அதிபர் வீடு திரும்பியபோதே இந்த விபத்து நடந்துள்ளது. விபத்துத் தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றன. உயிரிழந்தவர், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜின் மைத்துனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-இ)

## ம.உ. ஆணைக்குழுவுக்கு விரைவில் புதிய தலைவர்

கொழும்பு, ஜுன் 13

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவராக மேலும் ஒரு முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் நியமிக்கப்படவுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் கூடிய அரசமைப்புப் பேரவையில் இது தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. எனினும், இந்த வாரம் அரசமைப்புப் பேரவை ஒன்று கூடும் திகதி தொடர்பாக இதுவரை எந்த அறிவிப்பும் வெளியிடப்படவில்லை.

அதற்கு மேலதிகமாக, அந்த ஆணைக்குழுவின் ஏனைய ஆணையாளர்களில் தற்போது தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவராக உள்ள சட்டத்தரணி நிமால் புஞ்சிஹேவாவும் அடங்குகின்றார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு இதுவரை புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படவில்லை. முன்னதாக இந்த ஆணைக்குழுக்களுக்கான புதிய உறுப்பினர்கள் நியமனம் மிக விரைவில் நடைபெறும் என அரசமைப்புப் பேரவை அறிவித்திருந்தது. (எ-இ)


## ஒரே குடும்பத்தை சேர்ந்த மூவர் விபத்தில் மரணம்!

வாகன விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கொழும்பு - குருநாகல் பிரதான வீதியின் வரக்காப்பொல துல்ஹிரிய பிரதேசத்தில் நேற்று திங்கட்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

முச்சக்கர வண்டி ஒன்றும் டிப்பர் ஒன்றும் மோதிக்கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (எ-22)

# மடுத் திருவிழா தொடர்பில் நேற்று முன்னாயத்தக்கூட்டம்



மன்னார், ஜுன் 13

மன்னார் மடுத் திருப்பதியின் திருவிழாவுக்கான ஏற்பாடுகள் தொடர்பில், மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்றுத் திங்கட்கிழமை முன்னாயத்தக்கூட்டம் இடம்பெற்றது.

மன்னார் மாவட்டச் செயலர் ஸ்ரான்லி டிமெல் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது. மன்னார் மறைமாவட்ட ஆயர் தற்பொழுது வெளிநாடு சென்றுள்ளமையால் இந்தக்கூட்டத்தில் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி பி.கிறிஸ்துநாயகம் அடிகளார் ஆயரின் பிரதிநிதியாகக் கலந்துகொண்டார்.

அத்துடன் பல்வேறுபட்ட திணைக்களத் தலைவர்கள், மடுத் திருப்பதி பரிபாலகர் அருட்பணி பெப்பி சோசை அடிகளார் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளும் இதில் கலந்து கொண்டனர். இந்தக்கலந்துரையாடலில் மடுத் திருப்பதியின் ஆடிமாதப் பெருவிழாவை முன்னிட்டு நடைபெறவேண்டிய நடைமுறைகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டன. சுகாதாரம், போக்குவரத்து, குடிதண்ணீர், உணவு, மின்சார வசதி உள்ளிட்ட துறைகள் தொடர்பில் கலந்துரையாடலின்போது சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது.

மடுப் பெருவிழா எதிர்வரும் 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. அடுத்த மாதம் 2 ஆம் திகதி திருவிழா இடம்பெறவுள்ளது. (ம-60)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



யாழ்.உதைபந்தாட்ட லீக் நடத்தும் 'லீக் சுற்றுக்கிண்ணம்' - 2023 சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி அரியாலை யாழ். உதைபந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.
குறித்த போட்டியில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகமும் நாவாந்துறை சென்.நீக்கல்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. இதில் சென். நீக்கல்ஸ் அணி வீரர் வி.விக்னேஷ் ஒரு கோலை அடித்தார். பாடும்மீன் சார்பில் எந்தக் கோலும் பெறப்படாத நிலையில் சென். நீக்கல்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது. (ய)



கிளிநொச்சி - கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய மணிமண்டப அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (ய-113)

மன்னார் தள்ளாடி இராணுவத்தின் 54 ஆவது படைப்பிரிவு மற்றும் 543 ஆவது படைப்பிரிவு இணைந்து ஏற்பாடு செய்த குருதித்தான முகாம் மன்னார் நகர மண்டபத்தில் கடந்த 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ய-213)





சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி ஆங்கிலப் பாடசாலை ஸ்தாபகர் அமரர் ரி.பி. ஹன்ட் திருவுருவச் சிலை திறப்பு விழாவும், நர்த்தன தூரிகை ஓவியக் கண்காட்சியும் சாவகச்சேரியில் அமைந்துள்ள ஹன்ற் ஞாபகார்த்த ஓவியக் கூடத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. (ய-27)



கண்ணிவெடி அகற்றும் முன்னணி நிறுவனமான 'மக்' தனது நிறுவனத்தில் பணியாற்றும் 230 ஊழியர்களுக்கு நிதிசார் அறிவுப் பயிற்சி, பேச்சுசிங்களம், விவசாயம், ஆங்கிலமொழி, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பயிற்சி, தமிழ்எழுத்தறிவு போன்ற பல்வேறு பயிற்சிகளை பூர்த்தி செய்தமைக்கான சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவித்தது. (ய-110)



கைதடி தெற்கு பிள்ளையார் வீதியில் அமைந்துள்ள ஞானவைரவர் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் மடை உற்சவம் கடந்த 5ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது. (ய-27)



கோப்பாய் ஆசிரியர் கலாசாலை கணித மன்றத்தால் நடத்தப்பட்ட கணித கற்றல் உபகரணத் தயாரிப்புப் போட்டிக்கான பரிசளிப்பும் கௌரவிப்பு நிகழ்வும் மேற்படி கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் கடந்த 7ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்றது. (ய-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரூபாவின் பெறுமதி உயர்வு!

மத்திய வங்கி வெளியிட்டுள்ள நாணயமாற்று விகிதங்களின் அடிப்படையில் அமெரிக்க டொலர் ஒன்றுக்கு நிகரான ரூபாவின் பெறுமதி தொடர்ந்தும் ஏறுமுகத்தில் உள்ளது. நேற்றைய நிலைவரத்தின் அடிப்படையில், அமெரிக்க டொலரின் விற்பனை விலை 303.73 ரூபாவாகவும், கொள்வனவு விலை ரூபா 290.06 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது. (ம)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் திரு.வ. முருகேசு (SLTS - 1)**

(ஓய்வுபெற்ற உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர்)

திதி:- தசமி (13.06.2023)

தோற்றம் 11.01.1939

மறைவு 17.05.2020

காற்றோடு கனவான நாட்கள்
மூன்று ஆண்டுகளாய் நகர்ந்திடினும்
இன்றைக்கும் எம் உள்ளம்
கனக்கின்றது அப்பா! உங்கள் நினைவுகளால்....

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

காட்டடைப்பு வீதி,
காங்கேசன்துறை.

(CS/50812)AH-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 - 03 - 1951



மறைவு 11 - 06 - 2023

### யோகநாதன் யோகம்

(கிளி ரீச்சர்- ஓய்வு பெற்ற ஆசிரியர்)

பலாலி தெற்கு வயாவிளானை பிறப்பிடமாகவும் உரும்பிராயை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட யோகநாதன் யோகம் நேற்று முன்தினம் (11.06.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி அருமைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், யோகநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை மற்றும் சுப்பிரமணியம், நாகம்மா ஆகியோரின் சகோதரியும், யோ.ரஜீவ், பிருந்தா (England), நிரோஸ்னா (England) ஆகியோரின் அன்புத் தாயாரும், துஷாபன், பிரபா, அகல்யா ஆகியோரின் அன்பு மாமியாரும், லக்ஷரா, ஹஸ்வி (கஸ்வி), அர்ஜின், டிலா, கிரிஷ், ஜலா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.06.2023) புதன் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**076 587 1936**
**077 199 9655**

தகவல்:
குடும்பத்தினர்.

### Maths Personal Classes

- Grade 6 -11 Maths Classes (Tamil Medium)
- A/L - Combaine Maths Class ( Tamil Medium)

B.Thusanthan
Undergraduate - BSc
Contact No: 076 308 8170

(CS/52216)AH-1

### வீடு விற்பனைக்கு

உசன், மிருசுவிலில் அமைந்துள்ள 5 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு. மிருசுவில் புகையிரத நிலையத்திலிருந்து 200 m தொலைவில் உள்ளது.

077 875 9847, 077 599 0368

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி ஆறுமுகானந்தன்



தோற்றம் 08.08.1951

மறைவு 11.06.2023

வதிரி அரசடி வீதியை பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கு சிவசக்தி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி ஆறுமுகானந்தன் நேற்று முன்தினம் (11.06.2023) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் சிவசம்பு ஆறுமுகானந்தன் (ஓய்வுபெற்ற கிளை மேற்பார்வையாளர் உடுப்பிட்டி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்) அவர்களின் பாசமிகு மனைவியும், சந்திரசேகரம்-மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், சிவசம்பு-கமலாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும், தாட்சாயினி (லண்டன்), தயானி (லண்டன்), செந்தூரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரவின்நாத், தேவதாஸ், நிவியா ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆதித்தியா, அர்ச்சுனா, நிகாரிகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அச்சுவேலியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, நாளை (14.06.2023) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 288 2724

சிவசக்தி கோயிலடி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

(CR 40123)A-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் நடத்தப்படவேண்டும்

## ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை

கடந்த வருடப் புரட்சியால் மக்கள் ஆணையை இழந்த நாடாளுமன்றத்தை உடனடியாகக் கலைத்துத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாங்கள் உள்ளோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த வருடம் புரட்சி இடம்பெற்றது. அந்தப் புரட்சியின் விளைவாக ஜனாதிபதிப் பதவியிலிருந்து கோத்தாபய ராஜபக்ச விரட்டப்பட்டார். கோத்தாபய சட்டரீதியான ஜனாதிபதி. அப்படி இருந்தும், அவருக்கான அங்கீகாரம் இல்லாமல் போனது. நாடாளுமன்றத்துக்கும் இதேநிலை தான். இதனால் மக்கள் விரும்புகின்றவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்புவதற்கு மக்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும்.

அப்படிப்பட்ட நாடாளுமன்றத்தால்தான் நாட்டைச் சரியான பாதையில் இட்டுச் செல்லமுடியும். இதனால் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் நிற்கின்றோம் - என்றார். (அ-ஒ,22)

*33 ஊடக...*

மாதங்களுக்குள் இரத்தாகும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவ்வாறு இரத்தானால் புதிய அனுமதிப் பத்திரத்தைப் பெறவேண்டும் என்றும், அப்படி புதிய அனுமதிப் பத்திரத்தை வழங்குவதா, இல்லையா என்று ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஐவர் கொண்ட ஆணைக்குழுவே தீர்மானிக்கும் என்றும் அந்தத் தகவல்கள் கூறுகின்றன.

மேலும், ஊடகவியலாளர்களைச் சிறை அனுப்புவதற்கும், ஊடக நிறுவனங்களில் தேடுதல் நடவடிக்கையை மேற்கொள்வதற்கும் இந்தச் சட்டவரைவு வழிவகுக்கும் என்றும் அந்தத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (அ-ஒ,22)


**வேலையாட்கள் தேவை**

A9 வீதி திருமுறுகண்டியில் இயங்கும் சைவ உணவகம் ஒன்றுக்கு பின்வரும் பணி வெற்றிடங்களுக்கு உடனடியாக வேலையாட்கள் தேவைப்படுகின்றனர்.

✓காசாளர் ✓சிட்டைஎழுதுனர் ✓சமையலாளர் ✓சமையல்உதவியாளர் ✓உணவுபரிமாறுபவர் ✓சுத்திரிகரிப்பாளர்

தங்குமிடம் உணவு இலவசமாக வழங்கப்படும்.

தொடர்பு: 077 386 6250

**காணியுடன் வீடு விற்பனைக்கு**

திருநெல்வேலி வளாக வீதியில் 3/4 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு.

தொடர்பு: 076 739 2518

**தேவை**

தோட்ட வேலை தெரிந்த தங்கி நின்று வேலை செய்யக் கூடிய 50 வயதுக்கு மேற்பட்டவர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 077 977 3286


## மரண அறிவித்தல்

பிறப்பு 15 . 09 . 1950



இறப்பு 12 . 06 . 2023

### திரு.ப.ஜெகநாதன்

**(இளைப்பாறிய ஆசிரியர் - யாழ். மத்திய கல்லூரி)**

இல.59, அரச வீதி, நல்லூரைச் சேர்ந்த திரு.ப.ஜெகநாதன் (இளைப்பாறிய ஆசிரியர் - யாழ். மத்திய கல்லூரி) 12.06.2023 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சித்தவைத்தியர் பரமானந்தம் இராசலட்சுமி தம்பதியினரின் ஏக புதல்வனும், காலஞ்சென்ற பொன்னுத்துரை (A.D) இராசம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், காந்திமதியின் பாசமிகு கணவரும், செந்தூரன், திவ்யா ஆகியோரின் அன்புத் தந்தையும், தியாகராஜா, காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி மற்றும் சரஸ்வதி ஆகியோரின் பெறாமகனும், சந்தானலட்சுமி, கமலாதேவி, சந்திரா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கனகசபை, அமரர் சிவநாதன், இரத்தினசிங்கம், ஸ்ரீரங்கநாதன், அமரர் குலேந்திரன், யோகநாதன், பாலேந்திரன், கேதீஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனனும், கேசவன், ஸ்ரீராம், அருண்மொழி, அரவிந்தன், அம்பிகை, ஆரூரான், ஆர்த்திகா, அகிலன், மதன், ஸ்ரீவாகீசன், ஸ்ரீபரன், சுகேந்திரன், ஷனாதன், யுவன், ஷரண், பிரியங்கா, பிருந்தன், ஹர்சா ஆகியோரின் மாமனாரும், ஹம்சத்வனி, யுரேனியன், கவுனியன், ஆருண்யன், கங்கேஷ்வர், புருஷோத்தமன், கிருஷிகா, ஆதித்யா, சஹானா, அபராஜிதன், ஹம்சத்வனி, யர்ஷன், ஹம்சிகா, யர்ஷிகா, அதீனா, ஆதீஷ், தர்ஷனா, சங்கீர்த்தனா, அக்ஷனா, மதுஷிகா, அஸ்விகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2023) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நேரலை: https://www.zecastlive.com/event/630395/template


தகவல் : குடும்பத்தினர்.

077 2720007

(CS25226)(J-1)

## மரண அறிவித்தல்

பிறப்பு 03 . 02 . 1946



இறப்பு 10 . 06 . 2023

### ஆறுமுகம் சோமசுந்தரம்

(காவடிச் சோமு)

மீசாலை கிழக்கு மீசாலையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமாகிய ஆறுமுகம் சோமசுந்தரம் கடந்த (10.06.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பிள்ளையின் அன்புக் கணவரும் இராசரத்தினத்தின் (கனடா) பாசமிகு தந்தையும், சறோசாதேவியின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.06.2023) புதன்கிழமை கனடாவில் இடம்பெறும்.

அன்னாரது நினைவேந்தல் மீசாலை கிழக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தொடர்புகளுக்கு: 077 681 9839, 077 438 5395

தகவல்: குடும்பத்தினர்.

(CRM12[illegible]A-1)

## மரண அறிவித்தல்

பிறப்பு 10 . 06 . 1943



இறப்பு 12 . 06 . 2023

### வேலுப்பிள்ளை சிங்கராசா

(ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர், தெல்லிப்பளை மனநோய் பிரிவு)

வசாவிளானைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடம் மற்றும் கொல்லங்கலட்டியை வசிப்பிடமாவும் கொண்ட வேலுப்பிள்ளை சிங்கராசா நேற்று (12.06.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை அன்னபாக்கியம் தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற சின்னத்துரை சோதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான இராசையா, தம்பிஐயா நல்லம்மா, பசுபதி இராசமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கமலாதேவியின் ( பட்டுரீச்சர்) அன்புக் கணவரும், Dr.மதுரிகா ரமணன் (அச்சுவேலி பிராந்திய வைத்தியசாலை), விஜிதன் (Msc லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், Dr.க. ரமணன் (கண்சிகிச்சை பிரிவு, யாழ்ப்பாணம்), பிரியா விஜிதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மஹதியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14.06.2023) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கீரிமலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 0779923476, 0766672217. கஞ்சிட்டி, கொல்லங்கலட்டி.

தகவல்: குடும்பத்தினர்.

(CS 25225) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்

## சபைநிதி வேலைத்திட்டம் 2023

## கட்டம் II

1. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காகக் கோரப்படுகின்றது.
2. தேசியபோட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாக கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட03/2020(i)ஆம் இலக்க 11.01.2021ஆந் திகதிய,04/2016(ii)ஆம் இலக்க 08.05.2019ஆந் திகதிய, 04/2016(iii)ஆம் இலக்க 18.02.2021ஆந் திகதிய மற்றும் 04/2016(iv) இலக்க 09.02.2023ஆந் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வடமாகாணத்தை சார்ந்தவருக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.
3. இல 1-18 வரையான கேள்விகளுக்கு கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி வீதி மற்றும் கட்டடம் புனரமைப்புக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
4. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமையலுவலகத்தில் (தொலைபேசி 0212240017) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் **13.06.2023** தொடக்கம் **26.06.2023** ஆம் திகதி வரை வேலைநாட்களில் மு.ப 9.00 மணிமுதல் 14.00 மணிவரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் வலிகாமம் தெற்குபிரதேசசபை சுன்னாகம் எனும் இடத்திலிருந்து **13.06.2023** திகதியிலிருந்து **26.06.2023**ம் திகதிவரை வேலை நாட்களில் காலை 09.00 மணிக்கும் பி.ப 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3500/- (வரிநீங்கலாக) இனை செலுத்திபெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
7. பெறுகை ஆவணங்களினை இரு பிரதிகளில் தயாரித்து தனித்தனியாக இரு உறைகளில் இட்டு **27.06.2023**ம் திகதி மு.ப **10.00** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தலைவர், ,பிரதேசசபை பெறுகைக்குழு, வலிகாமம் தெற்குபிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்வி நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
8. கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒருபகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
9. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | வேலைவிபரம், ஒப்பந்த இலக்கம் | மதிப்பீட்டுத் தொகை (Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | | வேண்டப்படும் கேள்விப்பிணை செல்லுபடியாகும் காலம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நாட்கள் | திகதி | தொகை | திகதி |
| 1 | ஞானப்பிரகாசர் வீதியின் குறுக்கு வீதி, துரைவீதி புன்னாலைக்கட்டுவன் தெற்கு மற்றும் விவசாய வீதி 2ம் குறுக்கு ஒழுங்கை NP/14/41/15/02(05)/CF/2023/25 | 2.01 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 29.08.2023 | 21,000.00 | 26.09.2023 |
| 2 | கலை அம்மன் வீதி உப ஒழுங்கை, மாக்கியபுல வீதி உப ஒழுங்கை மற்றும் இலந்தையடி வீதி மத்தாலோடை மிகுதி NP/14/41/15/02(05)/CF/2023/26 | 2.18 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 29.08.2023 | 22,000.00 | 26.09.2023 |
| 3 | ஏழாலை கண்ணகி அம்மன் குறுக்கு வீதியின் உப ஒழுங்கை, சூராவத்தை முத்துமாரி அம்மன் வெள்ளவாய்க்கால் இணைப்பு வீதி மற்றும் ஏழாலை மத்தி காளிகோவில் ஒழுங்கை NP/14/41/15/02(05)/CF/2023/27 | 2.22 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 29.08.2023 | 23,000.00 | 26.09.2023 |
| 4 | குறுஞ்சிக்குமரன் மைதான வீதி உப ஒழுங்கை மற்றும் மயிலங்காடு கிழக்கு ஞான வைரவர் வீதி 1ம், 2ம் குறுக்கு வீதிகள் NP/14/41/15/02(05)/CF/2023/28 | 2.05 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 29.08.2023 | 21,000.00 | 26.09.2023 |
| 5 | முகாந்திர நாராயணர் 1ம் குறுக்கு வீதி, அம்பலம் வீதித் திருத்தம் மற்றும் செல்லாச்சி அம்மையார் 2ம் குறுக்கு வீதி திருத்தம் NP/14/41/15/02(05)/CF/2023/29 | 2.62 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 29.08.2023 | 27,000.00 | 26.09.2023 |
| 6 | பூதவராயர் வீதி மிகுதி வேலை, நாகதம்பிரான் வீதி மற்றும் சந்தன வைரவர் வீதி NP/14/41/15/02(05)/CF/2023/30 | 2.35 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 29.08.2023 | 24,000.00 | 26.09.2023 |
| 7 | தச்சனாவடலி முதலாம் குறுக்கு வீதி NP/14/41/15/02(05)/CF/2023/31 | 1.13 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 15.08.2023 | 12,000.00 | 12.09.2023 |
| 8 | வடலி அம்மன் முன் வீதியின் ஒழுங்கை மற்றும் கதிரமலை 5ம் ஒழுங்கை NP/14/41/15/02(05)/CF/2023/32 | 2.46 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 29.08.2023 | 25,000.00 | 26.09.2023 |
| 9 | தேவாலய 2ம் குறுக்கு வீதி, புளியடி வீதி மற்றும பருத்திகலட்டி 2ம் குறுக்கு வீதி NP/14/41/15/02(05)/CF/2023/33 | 2.28 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 29.08.2023 | 23,000.00 | 26.09.2023 |
| 10 | நாகம்மாள் வீதி மிகுதி வேலை NP/14/41/15/02(05)/CF/2023/34 | 1.38 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 15.08.2023 | 14,000.00 | 12.09.2023 |
| 11 | ஆலடி சூசையப்பர் வீதி NP/14/41/15/02(05)/CF/2023/35 | 2.01 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 29.08.2023 | 21,000.00 | 26.09.2023 |
| 12 | மானிப்பாய் பிரதான வீதி 6ம் ஒழுங்கை மற்றும் அம்மன் வீதி குறுக்கு வீதி NP/14/41/15/02(05)/CF/2023/36 | 2.12 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 29.08.2023 | 22,000.00 | 26.09.2023 |
| 13 | வாழ்வகம் வீதி, தும்மலை குறுக்கு வீதி மற்றும் மல்வம் 3ம் ஒழுங்கை குறுக்கு வீதி NP/14/41/15/02(05)/CF/2023/37 | 2.30 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 29.08.2023 | 24,000.00 | 26.09.2023 |
| 14 | தம்மலை 1ம், 2ம்,3ம் குறுக்கு வீதிகள், பட்டியோலை 3ம் ஒழுங்கை, 1ம் ஒழுங்கை NP/14/41/15/02(05)/CF/2023/38 | 2.51 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 29.08.2023 | 26,000.00 | 26.09.2023 |
| 15 | பத்தானை 7ம் உப வீதி மற்றும் அரசடி வீதி (ஆசாரி லேன்) NP/14/41/15/02(05)/CF/2023/39 | 2.38 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 29.08.2023 | 24,000.00 | 26.09.2023 |
| 16 | தாவடி மானிப்பாய் கிளை வீதிகள் மற்றும் இணுவில் ஞானலிங்கேஸ்வரர் வீதி கிளை வீதி NP/14/41/15/02(05)/CF/2023/40 | 1.90 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 15.08.2023 | 20,000.00 | 12.09.2023 |
| 17 | பத்தானை வீதி (கட்டம் 111) மற்றும் வட்டுவினி பிள்ளையார் கிளை வீதி (கொங்கிறீட்) NP/14/41/15/02(05)/CF/2023/41 | 2.00 | 90 நாட்கள் | C9,C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 29.08.2023 | 21,000.00 | 26.09.2023 |
| 18 | Improvement of Access path area at Maruthanarmadam public market (Stage II) NP/14/41/15/02(05)/CF/2023/42 | 0.71 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனர்மைப்பு | 49 நாட்கள் | 15.08.2023 | 8,000.00 | 12.09.2023 |

10. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் 19.06.2023 ம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்.

**திருமதி.சா.உருத்திரசம்பவன்,**
தலைவர்,
பெறுகைக்குழு,
வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.
13.06.2023

### தேர்தலை...

பேராசிரியரான நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில்நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும்தெரிவித்ததாவது:-

மக்கள் ஆணையின்றி முன்னெடுக்கப்படும் ஆட்சியானது எதேச்சதிகார ஆட்சியாகவே அமையும். ஜனநாயகம் நிலைநாட்டப்பட வேண்டுமெனில் உரிய காலத்துக்குள் தேர்தல்நடத்தப்பட வேண்டும்.

நுவரெலியாவில் வைத்து ஜனாதிபதி அண்மையில் ஆற்றிய உரையானது, தேர்தல் தொடர்பான அச்சத்தை உருவாக்கியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவோம். ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்க முடியாது. அவ்வாறான முயற்சியில் ஜனாதிபதி இறங்கினால் எதிரணிகளை இணைத்துக் கொண்டு அந்த முயற்சியைத்தோற்கடிப்போம் - என்றார். (அ-ஒ.44)

### ஜீவனோடு...

கொள்ளும்போது அவருடன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமானும் இணைந்துகொள்ளவுள்ளார்.

இந்தியப் பிரதமர், வெளிவிவகார அமைச்சர், நீதி அமைச்சர் மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஆகியோருடன் ஜனாதிபதி தலைமையிலான இலங்கை குழுவினர் பேச்சு நடத்தவுள்ளனர்.

இந்தியப் பிரதமருடனான சந்திப்பின்போது 'மலையகம் 200' தொடர்பிலும் கலந்துரையாடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணில் - ...

மற்றும் பொதுஜன பெரமுனவின் மாவட்ட அமைப்பாளர்களுடன் பேச்சு நடத்துவதற்கு ஜனாதிபதி தீர்மானித்திருந்தார். ஜனாதிபதி செயலகம் ஊடாக இதற்கான அழைப்பும் விடுக்கப்பட்டிருந்தது.

நாடாளுமன்றத்தில் அரசாங்கத்துக்கான பெரும்பான்மைப் பலம், அடுத்தக்கட்ட அரசியல் நகர்வு உள்ளிட்ட விடயங்கள் பற்றி கலந்துரையாடவே நேற்றிரவு இந்தக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் பங்கேற்றிருந்தாலும் பெரும்பாலான மாவட்ட அமைப்பாளர்கள் பங்கேற்கவில்லை. அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் சிலர் மொட்டுக் கட்சியின் மாவட்டத் தலைவர்களாக செயற்படுகின்றனர். அவர்கள் மாத்திரமே பங்கேற்றிருந்தனர்.

அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களை அழைப்பதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் இருந்தாலும், மாவட்டத் தலைவர்களை அழைப்பதாக இருந்தால் கட்சிக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும் என மொட்டுக் கட்சி ஏற்கனவே அறிவித்திருந்தது. எனினும், அந்தக் கோரிக்கை ஜனாதிபதி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

மொட்டுக் கட்சிக்கு தெரியப்படுத்தப்படாமல் மாவட்டத் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்தாலேயே, மேற்படி சந்திப்பில் மாவட்டத் தலைவர்கள் பங்கேற்கக்கூடாது என மொட்டுக்கட்சியின் நிறுவுநர் பசில் ராஜபக்சவிடம் இருந்து உத்தரவு பறந்துள்ளது.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் மொட்டுக் கட்சிக்குள் இரட்டை நிலைப்பாடு காணப்படுகின்றது. ஒரு தரப்பு ரணில் பக்கமும், மற்றைய தரப்பு மாறுபட்ட நிலைப்பாட்டிலும் உள்ளன.

நேற்றைய சந்திப்பின்போது ஒளி ஒலி பரப்புச் சட்டம், பொருளாதாரத் திட்டம் உள்ளிட்ட விவகாரங்கள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளது.

இதேவேளை - பெரமுனவால் அமைச்சுப் பதவிக்காக வழங்கப்பட்ட பட்டியலிலுள்ள சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்குவதற்கும் ஜனாதிபதி ரணில் மறுத்துள்ளார். அத்துடன் மஹிந்த ராஜபக்சவை பிரதமராக்கவேண்டும் என்ற கோரிக்கையையும் அவர் நிராகரித்துள்ளார்.

இந்தப் பின்னணியில் நேற்றைய கூட்டத்தில் பெரமுனவினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கடும்போக்குடன் நடந்து கொண்டதாகவும், இரு தரப்புக்கும் இடையிலான உறவு ஏறக்குறைய முறிவடைந்துவிட்டதாகவும் முதல் கட்டத் தகவல்கள் தெரிவித்தன.

(அ-ஒ.5,44)

## ரணிலின்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினருக்கும் இடையிலான சந்திப்பின்போது தொல்பொருள் திணைக்கள ஆக்கிரமிப்புக்கள் தொடர்பில் ஜனாதிபதி கடும் தொனியில் கேள்விகளை எழுப்பியிருந்தார். ஆக்கிரமிப்புக்களை உடனடியாக விடுவிக்கவேண்டும் என்றும் பணித்திருந்தார். ஜனாதிபதி ரணில், தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளரிடம் கடும் தொனியில் கேள்வி எழுப்பியமை தொடர்பான காணொலி நேற்றுக் காலை வெளியாகியிருந்தது.

இதனையடுத்து தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் அநுர மனதுங்க பதவி விலகல் கடிதத்தை அமைச்சின் செயலர் மற்றும் அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ளாரெனத் தகவல் வெளியானது. பதவி துறப்புக்கு தனிப்பட்ட காரணம் என்று அவர் குறிப்பிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை - தொல்பொருள் திணைக்களத்துடன் கடந்த மாதம் இடம்பெற்ற சந்திப்பில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அந்தத் திணைக்களம் தேவைக்கு அதிகமாக காணிகளை ஆக்கிரமிப்பதாகவும், பிக்குகள் உள்ளிட்ட தனி நபர்களிடம் நிதியைப் பெற்று செயற்பட்டு வருவதாகவும் குற்றம் சுமத்தியிருந்தார். அவற்றை உடனடியாக நிறுத்தவேண்டும் எனப் பணித்திருந்தார். இந்தப் பின்னணியிலேயே அவரது பதவி விலகல் இடம்பெற்றுள்ளது.

(அ-ஒ.இ)

## மக்கள்...

கொள்கைகளை தொல்பொருள் திணைக்களம் பின்பற்ற வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினருக்கும் இடையிலான சந்திப்பு ஜனாதிபதி செயலகத்தில் கடந்த 8ஆம் திகதி இடம்பெற்றது. இதில் தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் பேராசிரியர் அநுர மனதுங்கவும் கலந்துகொண்டிருந்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் இரா.சாணக்கியன் ஆகியோர் தொல்பொருள் திணைக்களத்தின் ஆக்கிரமிப்புக்கள் தொடர்பில் தெரிவித்தனர். இது தொடர்பில் ஜனாதிபதி தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளரிடம் கேள்வி எழுப்பினார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் காணப்படும் 229ஏக்கர்காணியைவிடுவிப்பதற்கான கடிதத்தை வழங்குவதாக தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் உறுதியளித்திருந்தார். எனினும் இதுவரையில் அதற்கான பதில் வழங்கப்படவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனால் ஜனாதிபதியிடம் தெரிவிக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த பணிப்பாளர் நாயகம் 'எனக்கு அதனை விடுவிப்பதில் பெரும் சிக்கல் காணப்படுகிறது' எனக் குறிப்பிட்டார். எனினும் அந்தக் காணிகளை விடுவிப்பது அமைச்சரவையின் கொள்கை என்றும், அதனைத் தொல்பொருள் திணைக்களம் பின்பற்ற வேண்டும் என்றும் ஜனாதிபதி கடுந்தொனியில் தெரிவித்ததோடு, அடுத்த முறை இவ்வாறு தேசிய கொள்கையைப் பின்பற்றாமைக்குக் காரணங்களை முன்வைத்துக் கொண்டிருக்கக் கூடாது என்றும் எச்சரித்தார்.

திருகோணமலையில் விகாரையொன்றை அமைப்பதற்கு 275 ஏக்கர் நிலப்பரப்பை எடுத்தால் அது மகா விகாரையை விடவும் பெரியதாகிவிடும். மகா விகாரை, தியதவனாராமய மற்றும் அபயகிரி உள்ளிட்ட அனைத்து விகாரைகளை இணைத்தால் கூட 100 ஏக்கர்தான் காணப்படும். அவ்வாறெனில் இவற்றை விட பெரிய விகாரையை அமைப்பதற்காகவா நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்? நீங்கள் எனக்கு வரலாறு கற்பிக்க முயற்சிக்கிறீர்களா? அல்லது நான் உங்களுக்கு வரலாறு கற்பிக்க வேண்டுமென விரும்புகிறீர்களா? என்று ஜனாதிபதி தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளரிடம் கேள்வியெழுப்பினார்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். அதற்காக ஒரு விகாரைக்கு 220 ஏக்கர் நிலப்பரப்பு உரித்துடையதாகக் காணப்படும் என்று நான் நினைக்கவில்லை. விடயத்துக்கு பொறுப்பான அமைச்சருடன் கலந்துரையாடி இது தொடர்பில் தீர்க்கமான முடிவொன்று எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி இந்தச் சந்திப்பில் தெரிவித்தார்.

பொது மக்களின் 3 ஆயிரம் ஏக்கர் காணியை கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னர் தொல்பொருள் திணைக்களம் ஆக்கிரமித்துள்ளது. பனாமுரே திலக வன்ச என்ற தேரரே தற்போது அந்தக் காணியை ஆக்கிரமித்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் சந்திப்பில் சுட்டிக்காட்டினார். கடந்த காலங்களில் நியமிக்கப்பட்டிருந்த கிழக்கு தொல்பொருள் பாதுகாப்பு செயலணியின் உறுப்பினராக அந்த தேரர் செயற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி, 'அந்தச் செயலணி தற்போது செயற்பாட்டில் இல்லையல்லவா? அத்தோடு அந்தச் செயலணி அரசாங்கத்தின் காணியையோ அல்லது தனியாரின் காணியையோ ஆக்கிரமிக்கமுடியாது. இதில் என்ன சட்ட முறைமை காணப்படுகிறது? திரியாயுக்கு எதற்காக 3 ஆயிரம் ஏக்கர் காணி தேவைப்படுகிறது? திரியாய் என்பது விகாரையல்ல, முன்னைய காலங்களில் அது துறைமுக மையமாகும். படகின் மூலம் திரியாயிலிருந்து ஹொரவப்பொத்தான வரை செல்ல முடியும். பின் ஹொரவபொத்தானையிலிருந்து அநுராதபுரத்துக்கும், மல்வத்து ஓயாவுக்கும், அங்கிருந்து மன்னாருக்கும் செல்லமுடியும்.

அந்தப் பகுதியில் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்துக் கோவிலொன்றும் காணப்பட்டது. எனவே அங்கு தேரர்களால் வைக்கப்பட்டுள்ள கற்களை உடனடியாக நீக்கவேண்டும் - என்றும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

(அ-ஒ.இ)

## கோத்தாவைக்...

வசம் தெரிவித்தார்.

அளுத்கம பகுதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமோக மக்கள் ஆதரவுடன் பொதுஜன பெரமுன 2016ஆம் ஆண்டு உதயமானது. உள்ளூராட்சி மன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல் என தொடர்ந்து மக்களாணையை உறுதிப்படுத்தினோம்.

30 வருடகால பயங்கரவாதப் போரை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டை அபிவிருத்தி செய்த ராஜபக்சக்களை பெரும்பாலான மக்கள் ஒருபோதும் புறக்கணிக்கமாட்டார்கள். அவர்கள் நாட்டுக்குச் சேவையாற்றியுள்ளார்களே தவிர நாட்டுக்குத் தீ வைக்கவில்லை.

2022ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதிக்குப் பின்னர் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் உட்பட ராஜபக்சக்கள் அரசியலில் இருந்து விலகி விடுவார்கள் என நாட்டுக்குத் தீ வைத்த மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள் கருதினார்கள்.

பொதுஜன பெரமுனவின் ஒத்துழைப்புடன் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு எட்டப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அரசாங்கத்தை உருவாக்கியுள்ளோம். வெகுவிரைவில் ஏதாவதொரு தேர்தல் இடம்பெறும் அப்போது எமது பலத்தை நாங்கள் மீண்டும் உறுதிப்படுத்துவோம் - என்றார்.

(அ-ஒ.இ)

## 'சிங்கப்பூர்'...

ஆங்கிலப் பத்திரிகையொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

'கடந்த நான்கு ஆண்டுகளாக இலங்கையைப் புதிய சிங்கப்பூராக மாற்றுவது பற்றிப் பேசப்படுகின்றது. சிங்கப்பூரில் லீ குவான் யூ என்ற மனிதரை விட்டு அங்கு வாழும் மக்களைப் பாருங்கள். மலே இனத்தவர்கள், இந்தியர்கள், சீனர்கள் எல்லோரும் தனித்தனி அடையாளங்களைக் கொண்டவர்கள். அவர்கள் சிங்கப்பூரை முன்னேற்றுவதற்காக ஒன்றிணைந்து செயற்படுகின்றனர். அதை இலங்கை முன்னுதாரணமாகக் கொள்ளவேண்டும்.

மேலும், ஆறு மாதங்களுக்கொரு தடவை சட்டங்களை மாற்றிக்கொண்டிருந்தால் முதலீட்டாளர்கள் எவரும் இலங்கையில் முதலீடு செய்ய முன்வரமாட்டார்கள். முதலீடு செய்வதாக இருந்தால் உறுதியான, நிலையான சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். முதலீட்டாளர்கள் டொலரில் முதலீடு செய்தால் அவர்களுக்குரிய இலாபப் பங்கு டொலரிலேயே வழங்கப்பட வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை - இறுதிப் போர் தொடர்பாக சர்வதேச விசாரணை தேவை என்று தமிழர் தரப்பும் உள்ளக விசாரணைதான் என்று இலங்கை அரசாங்கமும் கூறிக் கொண்டுள்ள நிலையில் இந்த விவகாரத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிலைப்பாடு தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது. 'இலங்கை அரசாங்கம் சர்வதேச விசாரணையை ஏற்றுக்கொள்ளும் என்று நான் நம்பவில்லை' என அவர் பதிலளித்துள்ளார்.

(அ-ஒ.6)

## கஞ்சா...

கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படையினரைத் தாக்கிய குற்றச்சாட்டில் நீண்ட காலமாகத் தேடப்பட்டு வந்த கயன் என்ற சந்தேகநபர் கட்டாருக்கு போலியான கடவுச்சீட்டைப் பயன்படுத்தி தப்பிச்செல்ல முற்பட்ட போதே யாழ். மாவட்டப் பொலிஸ் புலனாய்வுப் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளார். யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டார்.

கடந்த மாதம் 26ஆம் திகதி காரைநகர், ஊரிப் பகுதியில் 8 கிலோ கஞ்சாவுடன் சந்தேகநபரை விசேட அதிரடிப்படையினர் கைது செய்ய முற்பட்டபோது அவர்களைத் தாக்கிவிட்டுத் தப்பிச் சென்றிருந்தார். மேலும் மல்லாகம் மற்றும் ஊர்காவற்றுறை நீதிமன்றங்களில் அவர் மீது கஞ்சா தொடர்பான வழக்குகள் நிலுவையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ-ஒ.20,26)

## ஊடகங்களுடன்...

வாக்களிப்பதற்கு அனைத்து எதிர்க்கட்சிகளும் தீர்மானித்துள்ளன.

(அ-ஒ.22)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### கொழும்பில்

# தமிழரொருவர் வெட்டிக்கொலை

கொழும்பில் தனிப்பட்ட தகராறு காரணமாகத் தமிழர் ஒருவர் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

தெஹிவளையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 69 வயதுடைய வயோதிபரே உயிரிழந்துள்ளார். கடந்த சனிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று தெஹிவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர். வெட்டுக் காயங்களுக்குள்ளான நபர் களுபோவில போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (ம-22)

## கொழும்பில் திடீர்ச் சோதனை; 35 பேர் கைது

கொழும்பு - பொரளைப் பகுதியில் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினர் இணைந்து நடத்திய விசேட கூட்டுச் சோதனை நடவடிக்கையில் 35 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹெரோய்ன் வைத்திருந்த இரண்டு சந்தேகநபர்களும், ஐஸ் போதைப்பொருளுடன் நான்கு பேரும், கஞ்சாவுடன் ஆறு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், வாள்களை வைத்திருந்த இரண்டு சந்தேகநபர்களும், பிடியாணை நிலுவையிலுள்ள இரண்டு சந்தேகநபர்களும் மேலும் 19 சந்தேகநபர்களும் சந்தேகத்தின் பேரில் விசாரணைக்காகக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹெரோய்னுடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடமிருந்து ஹெரோய்ன் கடத்தல் மூலம் சம்பாதித்ததாகக் கருதப்படும் 26 இலட்சம் ரூபா பணமும் மீட்கப்பட்டுள்ளது. (அ-ஓ.22)

# தமிழ் எம்.பி.க்கள் அடங்காவிடின் அவர்களைச் சிறையிட வேண்டும்

## வீரசேகர ஆவேசம்



**கொழும்பு, ஜூன் 13**

**தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எடுத்ததுக்கெல்லாம் உணர்ச்சிவசப்பட்டுத் துள்ளிக் குதிக்காமல் இருக்க வேண்டும். அவர்கள் அடக்கி வாசிக்க வேண்டும். இல்லையேல் சிறையில்தான் அவர்கள் அடைக்கப்படுவார்கள் - இவ்வாறு மிரட்டல் பாணியில் தெரிவித்துள்ளார் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர.**

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'நாடாளுமன்றச் சிறப்புரிமையைப் பயன்படுத்தி எதனையும் சாதிக்கலாம் என்று கஜேந்திரகுமார், சாணக்கியன் உள்ளிட்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணுகின்றார்கள். இது அவர்களின் அறியாத்தனம் என்றே கூறவேண்டும். இதற்காக அவர்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்பிவைத்த தமிழ் மக்கள் வெட்கித் தலை குனியவேண்டும்.

பொலிஸாருடன் சண்டித்தனம் காட்டும் அளவுக்குத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் துணிவு வந்துள்ளது. இப்படியானவர்களைக் கைது செய்து அவர்களுக்குப் பிணை வழங்காமல் சிறையில்தான் தொடர்ந்து அடைத்து வைத்திருக்க வேண்டும். தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாய்ச்சவடால் நாடாளுமன்றத்திலும் சரி, வெளியிலும் சரி எடுபடாது. முதலில் அவர்கள் சட்டம், ஒழுங்கு தொடர்பில் நன்றாகத் தெளிவடைந்திருக்க வேண்டும்' - என்றார். (ம-22)


**பணியாளர்கள் தேவை**

கோண்டாவிலில் இயங்கும்

**XPERT NATURALS**

நிறுவனத்துக்கு

✓Invoice Clerk

✓Sales Rep

உங்கள் சுயவிபரங்களோடு தொடர்பு கொள்ளுங்கள்.

**074 201 4816**

(CS 25221)AH-



**பெயர்மாற்றம்**

அரசினர் வைத்தியசாலை ஊர்காவற்றுறையில் 1969 ஆம் ஆண்டு 4ஆம் மாதம் 22ஆம் திகதி பிறந்த **மூத்துகுமாரு தயாநிதி** ஆகிய நான் இன்று தொடக்கம் எனது பெயரை **லதா** என மாற்றம் செய்துள்ளேன் எனவும் இனிவரும் காலங்களில் அனைத்து ஆவணங்களிலும் **லதா** என கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக குடியரசு மக்களுக்கு அறியத் தருகின்றேன்.

(CS/50813)AH-1 - லதா -



**மணமகள் தேவை**

01. சண்டிலிப்பாய் - பண்டத்தரிப்பு. இந்து கௌரவகுலம் (V) 1989. பூராடம். B.Eng (Hons), Singapore மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 34424

02. கரவெட்டி. இந்து கௌரவகுலம் (V) 1992. பூராடம். Bachelor & Commerce Finance and Law, MBA, Australia Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 31471

03. காரைநகர் - இந்து கௌரவகுலம் (V) 1993. பரணி. BSc Civil Engineering (Peradeniga University),Singapore மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 31449

04. தெல்லிப்பளை - புத்தூர். இந்து கௌரவகுலம் (V) 1979. அவிட்டம். CIMA Fully Complited, A.C.A, Charted Accountant மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 32638

05. வட்டுக்கோட்டை - இந்து கௌரவகுலம் (V)1977. புனர்பூசம் Business Managment Degree, Uk Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 32812

06. பருத்தித்துறை - சண்டிலிப்பாய், இந்து கௌரவகுலம் (V) 1985. திருவாதிரை. Masters in Engineering, UK Citizen, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 32793

07. சங்கானை - இந்து கௌரவகுலம் (K) 1992. விசாகம். BA (Hons), Accounting, Accountant, UK Citizen, மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 34210

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer Phone - 077 539 3728 Whatsapp - 077 803 8193


# ரயில்வே திணைக்களத்தில் மாற்றங்கள் அவசியம்!

## அமைச்சர் பந்துல வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 13

ரயில்வே திணைக்களத்தின் முறையற்ற நிர்வாகத்தால் ரயில்வேசேவை பலவீனமடைந்துள்ளது. ரயில் சேவையை தனியார் மயப்படுத்த வேண்டாம் என்றால் சேவையை நிச்சயம் அதிகாரசபையாக மாற்றியமைக்க வேண்டும். திணைக்களம் என்ற நிர்வாகக் கட்டமைப்புக்குள் இருந்துகொண்டு முன்னேற்றமடைய முடியாது - இவ்வாறு போக்குவரத்துத் துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

ரயில்வே சாரதிகள் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் கொழும்பில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போக்குவரத்துச் சேவைத் துறையில் பல மாற்றங்களை ஏற்படுத்தவேண்டும். மாற்றத்தை ஏற்படுத்த மானியம் போதாது. ரயில்வே திணைக்களத்தின் வருமானம், செலவு முகாமைத்துவத்தில் நிலவும் பலவீனத்தன்மை திணைக்களம் நட்டமடைவதற்கு பிரதான காரணியாகவுள்ளது. சிறந்த நிர்வாக கட்டமைப்பு இல்லாமல் நிறுவனத்தை முன்னேற்ற முடியாது.

பொதுப்போக்குவரத்து சேவையில் நிலவும் பிரச்சினைகளுக்கு ஜனாதிபதியுடன் ஒன்றிணைந்து அமைச்சரவை ஊடாக தீர்வுகாணத் தயாராகவுள்ளேன். குறுகிய அரசியல் நோக்கத்தை மையப்படுத்தி மேற்கொள்ளப்படும் தொழிற்சங்க போராட்டங்களின் பங்குதாரர்களாக ரயில்வே தொழிற்சங்கங்கள் ஆளாகக்கூடாது என்பதை வலியுறுத்துகிறேன்.

ரயில்வேசேவை திணைக்களம் என்ற கட்டமைப்புக்குள் வைத்துக்கொண்டு ஒருபோதும் மேம்படுத்த முடியாது. திணைக்களம் எனும்போது வணிக நடவடிக்கைகளை முன்னெடுக்கமுடியாது. துறைமுக அதிகாரசபை, ரெலிக்கொம் நிறுவனம் ஆகியன அபிவிருத்தி அடைவதைப் போல் ரயில்வே திணைக்களமும் அபிவிருத்தியடைய வேண்டும்.

ரயில்வே சேவையாளர்களின் தொழில் மற்றும் ஓய்வூதிய உரிமைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நிர்வாகக் கட்டமைப்பில் மாற்றம் ஏற்படுத்த அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது. ரயில்வே சேவையை தனியார் மயப்படுத்த வேண்டாம் என்றால் நிச்சயம் ரயில்வேசேவையை அதிகார சபையாக மாற்றியமைக்கவேண்டும். திணைக்களம் என்ற கட்டமைப்புக்குள் இருந்துகொண்டு முன்னேறமுடியாது - என்றார். (எ-இ)


**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு.

* கல்வியங்காட்டு சந்தியில் இருந்து 1 1/2 km தூரத்தில் பருத்தித்துறை வீதியில் இருந்து 1200 m தூரம் (இலங்கை நாயகி அம்மன் கோயில் முன் வீதி).
* கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் மடத்தடியில்.
* இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி.
* ஒரு பரப்பின் விலை இரண்டு இலட்சத்தி ஐம்பது ஆயிரம் ரூபாய் (250,000/=) மட்டும்.

தொடர்பு: 076 739 0413 076 4365 814



**காணி விற்பனைக்கு உண்டு**

* யாழ்ப்பாணம் புத்தூரில் 48 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
* பருத்தித்துறை வீதி. புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
* புத்தூரில் தண்ணீர் தாங்கி அருகாமை (நிலப்பரப்பு)
* மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
* வியாபார நிலையங்கள் திருமண மண்டபங்கள் வீடு அமைப்பதற்கு உகந்த இடம்.
* பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.
* நன்னீரூற்று.

தொடர்பு: 076 7336 047, 076 7558 606


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 news@uthayan.com advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org